



## இன்னும் சரியாக 14 மாதங்கள்தான் இருக்கின்றன!

# 200 தொகுதிகளில் வெற்றிபெற வேண்டும்!

## சென்னை வடக்கு மாவட்டக் கழக பொங்கல் விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சியுரை!

**சென்னை, ஜன. 14 -**

**சென்னை, வியாசர்பாடியில், வடக்கு மாவட்டக் கழகம் சார்பில், மாவட்டக் கழகப் பொறுப்பாளர், சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர் அவர்களின் ஏற்பாட்டில், பொங்கல் விழாவையொட்டி நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு பெரம்பூர், ஆர்.கே.நகர், இராயபுரம் உள்ளிட்ட தொகுதிகளைச் சேர்ந்த கழக நிர்வாகிகள் பாக முகவர்கள், நிர்வாகிகள் பொது மக்கள் என 3 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றி னார். அப்போது அவர், அடுத்து வரும் ஒவ்வொரு நாளும், 2026ல் மாபெரும் வெற்றியைப் பெற்றிட, இலக்கு200ஐ நோக்கி உழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய எழுச்சிமிக்க உரை வருமாறு:

சென்னை வடக்கு மாவட்டம் சார்பாக நடைபெறுகின்ற இந்த பொங்கல் விழாவில் பங்கேற்று, உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். மாவட்டக் கழகச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர் அவர்களின் ஏற்பாட்டில் கழக நிர்வாகிகள், பொதுமக்கள், பாக முகவர்கள் என மொத்தம் 3 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள் இங்கு வழங்கப்படுகின்றன.

**கழகத்தின் தாய் வீடு!**

இந்த சென்னை, வடக்கு மாவட்டம்தான் நம் கழகத்தின் தாய் வீடு. இங்குள்ள ராயபுரம், ராபின்சன் பூங்காவில்தான் கலைஞர் உள்ளிட்ட தன் தம்பிகளுடன் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற லட்சியப் பேரியக்கத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் தொடங்கினார்கள். அப்படிப்பட்ட சென்னை வடக்கு மாவட்டத்திற்கு வருகை தந்து, உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த பெருமை அடைகிறேன்.

**பிரமாண்டமாக - ஒரு மகிழ்ச்சியான விழா இது!**

அதேபோல் ஆர்.டி.சேகர் அவர்கள் இந்த நிகழ்ச்சியை, இவ்வளவு சிறப்பாக, பிரம்மாண்டமாக, ஒரு மகிழ்ச்சியான திருவிழாவைப்போல ஏற்பாடு செய்துள்ளார். அவருக்கும், சென்னை வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகளுக்கும் என் அன்பையும், வாழ்த்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இளைஞர் அணிக்குப் பெருமை!**

ஆர்.டி.சேகர் அவர்கள் எந்த நிகழ்ச்சியை நடத்தினாலும், மிகச் சிறப்பாக நடத்துவார். அதற்கு இன்னொரு காரணம் என்னவென்றால், ஆர்.டி.சேகர் அவர்கள் இளைஞர் அணியில் இருந்து தாய்க் கழகத்திற்கு வந்தவர். அந்த வகையில் எங்களின் இளைஞர் அணிக்கு கூடுதல் பெருமை இது. அதனால்தான் என் மீது அவருக்கு எப்போதும் கொஞ்சம் அதிகமான அன்பு உண்டு. அதேபோல், ஆர்.டி.சேகர் மீது எனக்கும் கொஞ்சம் அதிகமான அன்பு உண்டு.

அதற்கு இன்னொரு காரணமும் உண்டு. என்னை தலைவர் அவர்கள் இளைஞர் அணிச் செயலாளராக நியமித்தபோது, ஆர்.டி.சேகர் அவர்கள் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளராக இருந்தவர். அப்போது என்னை வழி நடத்தியவர் ஆர்.டி.சேகர் அவர்கள். அதேபோல் இந்தக் கழகத்திற்காக பல்வேறு நிலைகளில் உழைத்து தலைவரின் நம்பிக்கையையும், அன்பையும் பெற்ற செயல்வீரர் ஆர்.டி.சேகர் அவர்கள்.

இந்த நிகழ்ச்சியில், உங்களுக்கு பொங்கல் வாழ்த்து கூறுவதோடு நன்றியும் தெரிவிக்க வேண்டும். சென்ற நாடாளுமன்றத் தேர்தலில் பிரச்சாரத்திற்கு இங்கு வந்து இருந்தேன். அப்போது வடசென்னையின் கழக வேட்பாளர் கலாநிதி வீராசாமி அவர்களை நீங்கள் வெற்றிபெற வைக்க வேண்டும் என்று உங்களிடத்தில் கேட்டிருந்தேன். கிட்டதட்ட மூன்றரை லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் கலாநிதி வீராசாமி அவர்களை சென்ற நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற வைத்தீர்கள். அதற்கு உங்களின் உழைப்புத்தான் மிகமிக முக்கியம். அதற்கு இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கலைஞரின் தம்பியாக இருந்தவர்!**

எனக்கு முன்பாக கழகத்தின் துணைப் பொதுச்செயலாளர் பொன்முடி அவர்கள் இங்கு பேசினார். அவரோடு இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்வது எனக்கு கூடுதல் பெருமை. ஏனென்றால், கழகத்தின் துணைப் பொதுச்செயலாளர், முத்தமிழறிஞர் கலைஞரின் அன்பைப் பெற்றவர். அவரின் தம்பியாக இருந்தவர். நம் கழகத் தலைவருக்கு ஒரு தளபதியாக இருந்து, இப்போது என்னையும் வழிநடத்திக்கொண்டு இருக்கிறார் பொன்முடி அவர்கள். அவரையும் இந்த நிகழ்ச்சிக்கு அழைத்ததற்கு ஆர்.டி.சேகர் அவர்களுக்கும், இங்கு வந்து வாழ்த்தியமைக்கு



அமைச்சர் பொன்முடி அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பொங்கலைப் போல் ஒரு பண்டிகை கிடையாது!**

அமைச்சர் பொன்முடி அவர்கள் சொன்னதைபோல வருடம் முழுக்க எத்தனையோ பண்டிகைகள் வரும், போகும். ஆனால், பொங்கலைப்போல ஒரு பண்டிகை கிடையாது. பொங்கலை நீங்கள் ஒரு மதத்திற்குள்ளேயோ, இல்லை ஒரு சாதிக்குள்ளேயோ அடைக்கவே முடியாது. சாதி, மதத்திற்கெல்லாம் அப்பாற்பட்ட விழா என்றால், அதுதான் பொங்கல் விழா. அதனால்தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பொங்கல் விழாவை சமத்துவ பொங்கல் என்று கூறுவார்கள். ஆனால், இங்கே சமத்துவம் என்றால் பிடிக்காத ஒரு கூட்டமும் இருக்கிறது. அது என்ன கூட்டம் என்று உங்களுக்கே தெரியும். அதுதான் சங்கி கூட்டம். அந்த கூட்டம் இப்போது பொங்கலையும் குறிவைத்து தங்களின் வேலைகளை ஆரம்பித்து இருக்கிறார்கள்.

**பண்பாட்டு திருவிழா!**

பொங்கல் நம் பண்பாட்டு திருவிழா. சங்கி கூட்டம் நம் பண்பாட்டுத் திருவிழாவின் மீது ஒரு எதிர்ப்பைக் காட்டுகிறார்கள். நம் பண்பாட்டை அழித்துவிட்டால் தமிழ்நாட்டிற்குள் எப்படியாவது நுழைந்து விடலாம் என்று அந்த சங்கிக் கூட்டம் ஆசைப்படுகிறது. அதற்காகத்தான் ஒன்றிய அரசின் யு.ஜி.சி, என்.இ.டி தேர்வுகளை வேண்டுமென்றே பொங்கல் நாளில் நடத்துகிறார்கள். நம் முதலமைச்சர் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து இருக்கிறார்.

பிரதமர் மோடி சென்ற முறை தமிழ்நாட்டில் எப்படியாவது ஒரு சீட்டாவது வாங்கிவிடலாம் என்று, சென்ற பொங்கலுக்கு பொங்கல் வைத்து புகைப்படம் எல்லாம் வெளியிட்டார். ஆனால், தமிழ்நாட்டு மக்கள் கடைசியில் மோடிக்கே பெரிய பொங்கல் வைத்தீர்கள். அந்த கோபத்தைத்தான் இன்றைக்கு தமிழ்நாட்டின்மேல் ஒன்றிய அரசு காட்டிக்கொண்டு இருக்கிறது. அதனால்தான் நாம் பொங்கலைக் கொண்டாடக்கூடாது என்று நினைக்கிறார்கள். இதற்காகவே பொதுவாக கொண்டாடுவதைவிட, இந்த முறை 100 மடங்கு அதிகமான எழுச்சியோடும், மகிழ்ச்சியோடும் இந்தப் பொங்கலை கொண்டாடியாக வேண்டும்.

**தமிழ்நாடு என்றால் பிடிக்காது!**

இன்னொருவர் இங்கு சுற்றிக்கொண்டு இருக்கிறார். அவர் யாரென்று உங்களுக்கே தெரியும். ஆளுநர் என்ற பெயரில். நம் முதலமைச்சர் அவர்கள் அமைச்சரவை என்ன எழுதி கொடுக்கிறதோ, அதை சட்டமன்றத்தில் படிப்பது மட்டும்தான் அவரின் வேலை. வேறு எந்த வேலையும் கிடையாது. அதைக்கூட தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக தவிர்த்துவிட்டு, சட்டமன்றத்திற்கு வாக்கிங் போகின்ற நபராக ஆளுநர் இருக்கிறார். சட்டமன்றத்திற்கு வருவார், வந்த வேகத்தில் போய்விடுவார். அவருக்கு தமிழ்நாடு என்றால் பிடிக்காது. இரண்டு வருடத்திற்கு முன்பு தமிழ்நாடு என்ற பெயரையே மாற்ற வேண்டும் என்றார். ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களும் எதிர்ப்பு தெரிவித்ததால் மன்னிப்பு கேட்டார். அதன்பிறகு தமிழ்த்தாய் வாழ்த்து பிடிக்கவில்லை அவருக்கு. தமிழ்த்தாய் வாழ்த்து பாடக்கூடாது என்று சொன்னார். தேசிய கீதம்தான் பாடவேண்டும் என்று சொன்னார். ஆளுநர் அவர்களே தேசிய கீதம் எங்களுக்கு முக்கியம். கண்டிப்பாக அதை நாங்கள் விட்டுக்கொடுக்க மாட்டோம். தேசிய கீதம் எவ்வளவு முக்கியமோ, அதேபோல் எங்களுக்கு தமிழ்த்தாய் வாழ்த்தும் முக்கியம்.

**ஏற்றுக்கொள்ள முடியாது**

தமிழ்நாடு பிடிக்காது, தமிழ்த்தாய் வாழ்த்து பிடிக்காது, பெரியார், அம்பேத்கர், அண்ணா, கலைஞர் பெயர்கள் பிடிக்காது. தமிழ்நாட்டின் அடையாளங்கள் எதுவும் பிடிக்காது. பிறகு ஏன் அவர் இங்கு இருக்க வேண்டும்? நம் ஊரில் கலைஞர் உருவாக்கிய டைடல் பார்க் தொடங்கி, அமெரிக்காவின் சிலிக்கான் வேலிவரை உயர்ந்த பொறுப்புகளில் இருப்பவர்கள் யார் என்று பார்த்தீர்கள் என்றால், நம் அரசு பள்ளியில் படித்த மாணவர்கள்தான். ஆனால், ஆளுநர் எதை சிறந்த கல்வி என்று சொல்கிறார் தெரியுமா? குலக்கல்வி கற்க வேண்டும் என்று சொல்கிறார். அதுதான் விஷ்வகர்மா திட்டம். நம் முதலமைச்சர் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்கிறார்.

செருப்பு தைப்பவரின் மகன் மீண்டும் செருப்பு தைக்க வேண்டும் என்பதுதான் இந்த குலக்கல்வி. பானை செய்பவரின் மகன் அதே வேலையை செய்ய வேண்டும் என்பதுதான் இந்த குலக்கல்வி. இதைத்தான் நாம் எதிர்த்துக் கொண்டு இருக்கிறோம். இதையெல்லாம் கண்டிக்க வேண்டிய எதிர்க்கட்சி அ.தி.மு.க அதைப்பற்றி எந்த கவலையும், கருத்தும் இல்லாமல் இருக்கிறது. நேற்று சட்டசபையில் எதிர்க்கட்சி தலைவர் என்ன பேசுகிறார்? அவர்களின் முதல் பிரச்சினையே என்ன தெரியுமா? பொதுவாக எதிர்க்கட்சி தலைவர் நாங்கள் பேசுவதையும் தொலைக்காட்சியில் காட்டுங்கள் என்றுதான் சொல்வார். ஆனால், நம் எதிர்க்கட்சி தலைவர் கொஞ்சம் வித்தியாசமானவர். அவர் என்ன தெரியுமா சொல்கிறார். எங்களைக் காட்டுகிறீர்களோ இல்லையோ, ஆளுநரை காட்டுங்கள். ஏன் ஆளுநரை காட்ட மறுக்கிறீர்கள் என்று கேட்கிறார் எடப்பாடி பழனிசாமி. இதிலிருந்தே அ.தி.மு.கவுக்கும் பா.ஜ.கவுக்கும் கள்ளக்கூட்டணி இருக்கிறது என்று தெரிந்துகொள்ள வேண்டும்.

**திண்ணைப் பிரச்சாரங்கள்!**

இரண்டு, மூன்று நாட்களாக எடப்பாடி பழனிசாமி அவர்களின் உறவினர் வீட்டில் ஐ.டி. ரெய்டு நடந்துகொண்டு இருந்தது. பா.ஜ.க. அ.தி.மு.க. கூட்டணி நிச்சயம் உறுதியாகிவிட்டது என்று அப்போதே சொன்னேன். சென்ற முறை பிரிந்து வந்தார்கள். இந்த முறை சேர்ந்தே வருவார்கள். நமக்கு வேலை சுலபமாக முடிந்தது. வேலை சுலபமாக முடிந்தது என்று நீங்கள் எல்லாம் சாதாரணமாக இருந்துவிடக் கூடாது. இன்னும் சரியாக 14 மாதங்கள்தான் நம் கைகளில் இருக்கிறது. குறைந்தது 200 தொகுதிகள் வெற்றிபெற வேண்டும் என்று நம் தலைவர் அவர்கள் நமக்கு இலக்கு கொடுத்து இருக்கிறார். வெல்வோம் இருநூறு, படைப்போம் புது வரலாறு என்று சொல்லி இருக்கிறார். அது நடக்க வேண்டும் என்றால் இன்றிலிருந்தே நாம் அனைவரும் நம் தேர்தல் பிரச்சாரத்தை ஆரம்பித்தாக வேண்டும். திண்ணைப் பிரச்சாரங்களில் ஈடுபட வேண்டும்.

நாம் ஒவ்வொருவரும், ஒவ்வொரு வாக்காளரையும் குறைந்தது நான்கு முறையாவது



நேரில் சந்தித்துப் பேச வேண்டும். நம் அரசின் திட்டங்களை விளக்க வேண்டும். தொடர்ந்து அவர்களிடம் சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும். இப்போது அரசியல் களம் எவ்வளவு முக்கியமோ, அதேபோல இணையதளமும் மிகமிக முக்கியம். இணையதளத்தில் வாட்ஸ்அப், டிவிட்டர், இன்ஸ்டாகிராம், யூடுப்களில் நீங்கள் ஆக்டிவாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நம் அரசின் சாதனைகளை அங்கும் பரப்ப வேண்டும்.

பொதுவாக பொய் மிகவும் எளிதாக, உண்மையைவிட வேகமாக பரவிவிடும். நம் மீது வைக்கப்படும் பொய்க்குற்றச்சாட்டுகளுக்கு நீங்கள் பதிலளிக்க வேண்டும். மக்களிடம் எடுத்துச்சொல்ல நம்முடைய சாதனைகளே ஏராளம் உள்ளன. நம் தலைவர் அவர்கள் முதலமைச்சராகி போட்ட முதல் கையெழுத்து மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து வசதி திட்டம். இந்த நான்கு வருடங்களில் 600 கோடி பயணங்களை மகளிர் கட்டணமில்லாமல் மேற்கொண்டுள்ளார்கள். ஒவ்வொரு மகளிரும் குறைந்தது இந்த திட்டத்தின் மூலம் மாதம் தொள்ளாயிரத்திலிருந்து ஆயிரம் ரூபாய்வரை சேமிக்கிறார்கள்.

**தமிழ்ப்புதல்வன் திட்டம்**

அதேபோல் பெண்கள் படிக்க வேண்டும். பள்ளிக்கூடம் படித்தால் மட்டும் போதாது. கல்லூரி சென்று உயர்கல்வி படிக்க வேண்டும் என்று அரசுப் பள்ளியில் படித்து, உயர்கல்வி சென்று படிப்போருக்காக புதுமைப்பெண் திட்டம். மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தால் பெண்கள் அதிகமாக கல்லூரிகளுக்கு வர ஆரம்பித்து விட்டார்கள். இப்போது மாணவர்களையும் பள்ளிக் கல்வி முடித்துவிட்டு, கல்லூரி படிக்க வைக்க வேண்டும் என்று அதற்கு தமிழ்ப்புதல்வன் திட்டத்தை தந்திருக்கிறார் நமது முதலமைச்சர். அவர்களுக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகை வழங்குகிறார் நம் முதலமைச்சர்.

இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டம் முதலமைச்சரின் காலை உணவு திட்டம். மற்ற மாநிலங்கள் இதைப் பார்த்து ஆச்சரியப்படுகிறார்கள், பாராட்டுகிறார்கள். எப்படி இந்த திட்டத்தை நிறைவேற்றுகிறீர்கள் என்று ஆச்சரியப்படுகிறார்கள். 20 லட்சம் குழந்தைகள் காலையில் பள்ளிக்கு வந்து வயிறார சாப்பிட்டு விட்டு அதன்பிறகு கல்வி கற்கிறார்கள்.

எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக ஒரு திட்டம் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டம். இது நம் தேர்தல் அறிக்கையில் தலைவர் சொன்ன திட்டம். செயல்படுத்த முடியாது என்று சொன்னார்கள். கடும் நிதி நெருக்கடி இருந்தாலும், நம் தலைவர் அவர்கள் 2023ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாளில் இந்த திட்டத்தை தொடங்கி வைத்தார்.

விண்ணப்பித்தவர்கள் 1 கோடியே 55 லட்சம் மகளிர். அதில் ஒரு கோடியே 15 லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் வழங்கப்படுகிறது. வழக்கமாக 15ஆம் தேதிதான் தொகை வரவு வைக்கப்படும். ஆனால் இம்மாதம் பொங்கல் என்பதால்,10ஆம் தேதியே தொகை சென்றுவிட்டது. இப்படி ஒவ்வொரு திட்டத்தையும் பார்த்து, பார்த்து நம் தலைவர் அவர்கள் செய்துகொண்டு இருக்கிறார். இதையெல்லாம் நீங்கள் மக்களிடம் கொண்டுபோய் சேர்க்க வேண்டும்.

**படைப்போம் வரலாறு!**

நம் தலைவர் அவர்கள் சொன்னதைபோல, 200 தொகுதிகள் வெற்றிபெற வேண்டும் என்றால், அதில் இந்த சென்னை வடக்கு மாவட்டத்தில் உள்ள இராயபுரம், பெரம்பூர், ஆர்.கே.நகர் தொகுதிகளில் தமிழ்நாடே திரும்பிப் பார்க்கின்ற அளவுக்கு அதிகமான வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற வைக்க வேண்டும்.

தலைவர் அவர்கள் யாரை வேட்பாளராக நிறுத்தினாலும், தலைவர்தான் இங்கு வேட்பாளர் என்ற எண்ணத்தில் நீங்கள் தேர்தல் பணியில் ஈடுபட வேண்டும். வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு என்று நம் தலைவர் சொல்லியிருக்கிறார் என்றால், இங்கு வந்து இருக்கின்ற நிர்வாகிகள் உங்களை நம்பித்தான் சொல்லியிருக்கிறார். எனவே, தலைவரின் இலட்சியத்தை நிறைவேற்றும் வகையில் நாம் அயராது உழைக்க வேண்டும். கடந்த நடாளுமன்ற தேர்தலில் வடசென்னை தொகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர் சகோதரர் கலாநிதி வீராசாமி அவர்களை மூன்றரை வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிப்பெற வைத்தீர்களோ அதேபோல் இந்த தேர்தலும் நமக்கு மிகமிக முக்கியம். அதே உணர்வோடு நீங்கள் களப்பணி ஆற்றி, இந்த மூன்று தொகுதிகளின் வெற்றியையும் இந்த பொங்கல் திருநாளில் நீங்கள் சபதமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறு கிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

அமைச்சர் பொன்முடி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி.சேகர், ஐட்ரீம் மூர்த்தி, ஜே.ஜே. எபினேசர், மாவட்டக் கழக நிர்வாகிகள் வெற்றி வீரன், எஸ்.ஆர்.கமலக்கண்ணன், மு.கோபி, நாகம்மை கருப்பையா, தயாளன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இளைய அருணா, இரா.கருணா, ந.மனோகரன், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் பி.டி.பாண்டிச்செல்வம், நரேந்திரன், மருது கணேஷ், தலைமைக் கழகப் பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, சட்டமன்ற தொகுதிப் பார்வையாளர்கள் கன்னிகை ஸ்டாலின், கே.வி.லோகேஷ், பகுதிக் கழகச் செயலாளர்கள் ஜெயராமன், முருகன், வ.பெ. சுரேஷ், ஜெபதாஸ் பாண்டியன், இரா.செந்தில் குமார், இரா.லட்சுமணன்,

பொதுக்குழு உறுப்பினர்கள் அமுலு, தமிழ்ச் செல்வன், கமலக்கண்ணன், ராஜேந்திரன், சிவக்குமார், சண்முகம், மதிவாணன், டான் பாஸ்கோ பள்ளி தாளாளர் ஃபாதர் ஜோ ஆண்ட்ரோ, தலைமை ஆசிரியர் ஜெரால்டு மிராண்டா, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் வை.கவுதமன், லயோலா மதன், பொன்.இளவரசன், கட்பீஸ்.சோமசுந்தர மூர்த்தி, இ.ரவிக்குமார், வட்டக் கழகச் செயலாளர் வி.முருகன், மண்டலக்குழுத் தலைவர் நேதாஜி கணேசன், மாமன்ற உறுப்பினர் ஆனந்தி உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.

